பொள்ளாச்சி வாசி

ஆசிரியர் P. S. வேலுசாமி — வியாழன் வெளியீடு.

பேர் 1. பொள்ளாச்சி. 23—8—51. விலை அரையணா. 6-பக்கம். வெற்றி 2

பொள்ளாச்சியில் சுதந்திர தினவிழா.

ஆகஸ்ட் 15-ம் தேதி காலை காந்தீய ஊழியர் சங்கத்தில் டவுன் காங்கிரஸ்கமிட்டித்தலைவர் ஸ்ரீ எம். ராமசாமி தேசியக்கொடியேற்றுவித்தார் தாலூக்கா காங்கிரஸ்கமிட்டி ஆபீஸில் ஸ்ரீ பி எஸ். வேலுசாமி தேசியக்கொடியேற்றுவித்தார். ஹரிஜன ஹாஸ்டலில் ஸ்ரீ ஏ. கே. சுப்ரமணியமும், முனிசிபல் ஆபீஸில் ஸ்ரீ மரியதாசும், சின்னம்பாளையத்தில் ஸ்ரீ எஸ். குப்பமுத்தும் தேசியக்கொடி யேற்றுவித்தனர். தாலூக்கா ஆபீஸில் வைஸ்சேர்மன் தேசியக்கொடி யேற்றியபின் பள்ளி மாணவர் போலீஸ் அணிவகுப்பு, நெருப்பு அணைக்கும் படையினர், காங்கிரஸ்வாதிகள், பொதுமக்கள் அடங்கியமாபெரும் ஊர்வலம் மதார்நிலை மைதானத்தை அடைந்தது. நகர காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் ஸ்ரீ பி. நாச்சிமுத்துக் கவுண்டர் தேசியக்கொடியையேற்றுவித்தார். பள்ளி மாணவ மாணவிகளுக்கு மிட்டாய் தின்பண்டங்கள் வழங்கப்பட்டன. பிற்பகல் 3-மணிக்கு இளைஞர் காங்கிரஸ் ஆபீஸில் நகர காங்கிரஸ் கமிட்டித்தலைவர் ஸ்ரீ எம். ராமசாமிக்கவுடர் தலைமையில் ஸ்ரீமான்கள் எஸ். காதர்மைதீன், ஆறுமுக முதலியார், கே. சி கந்தசாமி, சந்திரசேகரன் அ. ராமச்சந்திரன், அ. முத்துசாமி, அ. பாசித், இளங்கதிர் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். மாலையில் காங்கிரஸ் ஆபீஸிலிருந்து சிலம்ப விளையாட்டுகளுடன் மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது. காங்கிரஸ் பொதுக்கூட்டம் ஸ்ரீ பி. டி. சென்னப்பகவுடர் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீமான்கள் மரியதாஸ், சுப்ரமணியம், அ. பாசித், இளங்கதிர், கந்தசாமி, நடராஜ், விஜயராகவ அய்யங்கார், பி. எஸ். வேலுசாமி முதலியோர் பேசினார்கள். காரியதரிசி காதர்மைதீன் வந்தனம் கூறினார்.

வால்பாரையில் சுதந்திரதினம்,

ஆகஸ்டு 15-ம் தேதி காலை வால்பாரை நகர காங்கிரஸ் கமிட்டியின் ஆனைமலைப்பிரதேசங்கள் ஒவ்வொரு தோட்டங்களிலும் கொடியேற்று விழாவும், மாணவர்களுக்கு தின்பண்டங்களும் வழங்கப்பட்டு எங்கும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. வால்பாரையில் காலை 6-மணிக்கு வெற்றி முரசுடன் ஆரம்பிக்கப்பட்டு 9-மணிக்கு போலீஸ் அணிவகுப்புடன் வெகு விமரிசையாக கொடியேற்றுவிழா நடைபெற்றது. 2-மணிக்கு ஸ்ரீ காந்தி மைதா[illegible]தில் வால்பாரை நகர காங்கிரஸ்கமிட்[illegible] தலைவர் ஸ்ரீ பி. முத்துசாமி தலைமை[illegible] பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீம[illegible]கள் காளியப்பன், தாண்டவன், கோ[illegible] ஜி. என். ராஜு ஆகியோர்கள் பேசி[illegible]கள்.

பிரச்சாரக்கமிட்டி.

15-ம் தேதி மாலை 5-மணிக்கு வால்பா[illegible] ஹரிஜனஹாஸ்டல் கட்டிடத்தில் கோ[illegible] ஸ்ரீ ஜி. என். ராஜு தலைமையில் ஊழியா[illegible] மேஸ்திரிகள், தொழிலாளர் ஆகியோ[illegible] முக்கிய தலைவர்களின்கூட்டம்நடைபெற்[illegible] நாமும் எதிர்காலம் என்பதுபற்றி ஸ்ரீம[illegible]கள் பி. முத்துசாமி, ஏ. தாண்டவன், கா[illegible]ப்பன் ஆகியோர்கள் பேசிய பின் ஆனைம[illegible] பிரதேசத்தில் வரும்தேர்தல்கள் எதிர்கா[illegible]தில் இப்பிரதேசத்தின் முன்னேற்றத்தி[illegible] வேலைகள் கவனித்துப்பணியாற்ற 15-[illegible]கள் கொண்ட பிரச்சாரக்கமிட்டி அமைக்[illegible]ட்டது.

தேவை;

கீழ்க்கண்ட வேலைகளுக்கு பயிற்சிபெற்றவர்களிடமிருந்து வயது, ஜாதி படிப்பு [illegible]லிய விவரங்களுடனும் யோக்யதாம்சபத்திரங்களுடனும் (General & [illegible]) மனுக்கள் வேண்டப்படுகின்றன. ஜில்லாபோர்டு நிர்ணய சம்பளமும் வழக்கமான ப[illegible]ப்படியும் கொடுக்கப்படும்.

1. எல். டி., பீ. டி., பீ ஈ. டி. (ஆண்களும் பெண்களும்.)
   (கணிதம், பௌதீகம், ரசாயனம், சரித்திரம்.)
   (பயிற்சிபெறாத பட்டதாரிகளும் விண்ணப்பிக்கலாம்)
2. தமிழ்பண்டிதர்கள்.
3. தேகப்பயிற்சி ஆசிரியர்களும், ஆசிரியைகளு[illegible]
4. டிராயிங் மாஸ்டர்கள்.
5. ஹிந்தி பண்டிதர்கள்.
6. தேகப்பயிற்சி டைரெக்டர்கள்.
7. செகண்டரி கிரேட் ஆசிரியர்கள்,

விண்ணப்பங்கள் யாவும் 25—8—51 ம் தேதிக்குள் கோயமுத்தூர் ஜில்லாபோ[illegible] தலைவருக்கு வந்துசேரவேண்டும்.

ஜில்லாபோர்டு அலுவலகம்,
3—8—51.

தலைவர்,
ஜில்லாபோர்டு, கோயமுத்தூர்.

செல்வாக்க ... குந் ... ற்
... தி ...

பொள்ளாச்சி வாசி

பொள்ளாச்சி 23—8—51. வியாழன்.

யார் பெரியவர்!

நேருஜி பெரியவரா, தாண்டன்ஜி பெ
யவரா என்ற ... பரீட்சையில் தற்சம
ம் தலைவர்க ... ங்கிவிட்டனர் ஜனநா
...முறை... டி ... ஜாரிட்டியாரால் தேர்
தெடுக்கப்ப ... தலைவர் தாண்டன்ஜி.
வர் தேர்தலி ... வெற்றிபெற்றதும் சர்
ார்ஜி நேரு ... ன்ற தலைவர்களைக்கல
து கொ ... காரியக்கமிட்டியை அ
மைத்தா ... ல் இருந்த காலத்தில்
ப்பெ ... ாரியக்கமிட்டியை ஒப்
க்கொண்டு நேரு கமிட்டியிலும் இருந்
ார். தேர்தலில் தோல்விகண்ட கிருப
ளானி இப்போது தனிக்கட்சி ஆரம்பித்
க்கொண்டு காங்கிரஸை தாறுமாறாகத்
ட்டும் திருப்பணியில் இறங்கியுள்ளார்.
நருஜியானாலும்சரி தாண்டன்ஜி யானா
லும்சரி எந்த தனிப்பட்டவர்களைவிட ஸ்
தாபனம்தான் பெரிது. எந்த இந்திரன்
திரனைக்காட்டிலும் காங்கிரஸ்காரர்களு
கு காங்கிரஸ்தான் பெரிது என்பதைமற
க்கூடாது. சில தலைவர்கள் யார் பெரி
வர் என்ற பலப்பரீட்சையில் கோஷ்டி
சேர்த்துக்கொண்டு இருப்பது காங்கிர
ஸையே குழிதோண்டிப் புதைக்கும் தற்
கொலைத்தனமாகும். இவர்கள் சொந்த
செல்வாக்கைப்பார்த்துத்தேசத்தை குட்
டிச்சுவராக்கி விடுவார்கள் போலிருக்கிறது.
ந நிலையில் டில்லியில் கூடும் அ. இ.
கமிட்டியின் பொறுப்பு மகத்தானது.
ற்போது நேருஜிக்கும் தாண்டன்ஜிக்கும்
ற்பட்டிருக்கும் மனக்கசப்பை சுமுகமா
த்தீர்க்கவேண்டிய பொறுப்பு அ. இ. கா
மிட்டியினுடையதாயிருக்கிறது. காரியக்
மிட்டியை மாற்றி அமைப்பதாக தாண்
டன்ஜியை நீக்கி விடுவதாலோ நெருக்கடி
தீர்ந்துவிடாது. நேருஜியின் பொறுப்பு
தான் தற்போது அதிகம். அவர் கூடுமா
னவரை நெளிந்துகொடுத்து இப்போது
ள்ள காரியக்கமிட்டியில் தானும் இருந்து
கொண்டு தேசத்திற்கு வழிகாட்டுவாரே
யானால் நலமாயிருக்கும். அதைச்செய்ய
ஆண்டவன் நமக்கு அருள்புரிவாராக.

கோவை ஜில்லா 27-வது அரசியல் மகாநாடு பொள்ளாச்சி

17—8—51 வெள்ளி மாலை நேகமத்தில் நடந்த வரவேற்புக்கமிட்டிக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்;—

செப்டம்பர் 30-ம் தேதிஞாயிறு பொள்ளாச்சி தாலூக்கா நேகமத்தில்ஷை மகாநாட்டை சிறப்பாக நடத்துவதெனவும் வரவேற்புக்கமிட்டி அங்கத்தினர் கட்டணம் ரூ. 5, பிரதிநிதிக்கட்டணம் ரூ. 3, பார்வையாளர் கட்டணம் 8-அணா எனத் தீர்மானிக்கப்பட்டது தமிழ்நாடு காங்கிரஸ்கமிட்டி அமைப்பு விதி 37 அ. ஆ. இ 1, 2 இவைகளில் கண்டுள்ளபடி ஜில்லாவிலுள்ள எல்லா தீவிர அங்கத்தினர்களும் காங்கிரஸ் பஞ்சாயத்து மெம்பர்களும் மகாநாட்டின் பிரதிநிதிகளாகக்கருதப்படுவார்கள் ஜில்லாவிலுள்ள மாகாண ஜில்லா கமிட்டி அங்கத்தினர்களும் ஜில்லா காரியக்கமிட்டி மெம்பர்கள் ஜி. கா. கமிட்டி தலைவர் ஷை மகாநாட்டுத்தலைவரும் ஒவ்வொரு பிரதம கமிட்டியாலும் தங்கள் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட 3-அங்கத்தினர்கள் ஆகியோரைக்கொண்ட கமிட்டிதான் விஷயாலோசனைக்கமிட்டியாகக்கருதப்படும்.

தாலூகா நகர காங்கிரஸ் கமிட்டிகள் மகாநாடு நடப்பதற்கு ஒருவார முன்னதாகவே தங்கள் கமிட்டியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட விஷயாலோசனை கமிட்டி மெம்பர்களின் பெயர்களை வரவேற்புக்கமிட்டித் தலைவருக்கு தெரியபபடுத்திவிடவேண்டும். மகாநாட்டின் நடவடிக்கைகள் பற்றி தீர்மானங்கள் அனுப்புவோர்களும் நன்கொடை அளிக்க விரும்புவோர்களும் வரவேற்புக் கமிட்டித்தலைவர் ஜில்லா அரசியல் மகாநாடு பொள்ளாச்சி என்றவிலாசத்திற்கு அனுப்பவேண்டும். மகாநாட்டிற்கு மத்திய ராஜிய மந்திரிகளும் பிரபலதலைவர்களும் அழைக்கப்பட்டிருக்கிறார். ஷை மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டிக்காரியாலயம் தற்காலீகமாக பொள்ளாச்சித்தாலூகா காங்கிரஸ்கமிட்டி காரியாலயத்திலேயே நிறுவப்பட்டிருக்கிறதென வ. க. தலைவர் ஸ்ரீ கோவிந்தசாமிக்கவுண்டர் தெரிவிக்கிறார்.

மணமகள்.

(சினிமா விமர்சனம்)

மணமகள் கோவை கர்னாடிக் டாக்கிஸில் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. ஈரோடு ராஜாராம் தியேட்டரிலும் நடைபெறுகிறது. பொள்ளாச்சி நாராயணா டாக்கிஸில் விரைவில் திரையிடப்படும்.

மணமகள் கதை நன்றாகவும் பார்ப்பதற்கு உற்சாகமாகவும் இருக்கிறது. என். எஸ். கிருஷ்ணனின் சொந்த டைரெக்ஷனில் தயாரான இந்தப்படம் நல்லவெற்றி அளித்திருக்கிறது. கதையின் மத்தியில் 1950 — 60 என்ற நாடகம் புகுத்தப்பட்டிருப்பது அற்புதமாயிருககிறது. இதை ஒவ்வொருவரும் அவசியம பார்க்கவேண்டும்.

தேசபக்தர்கள், ஊழியர்கள் கஷ்டமும் அவர்களின் தேசசேவையையும் வரப்போகும் பொதுத்தேர்தலில் மக்களின்கடமையும் நன்கு எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு முதலிய பஞ்சத்தின் காரணங்களையும் போக்க வழியும்சொல்லப்படுகிறது. பணக்காரர்களிலும் தெய்வபக்தி உள்ளவர்களும் நல்லவர்களும் உண்டு என்பதை உணர்த்துவதோடு கதையின் முடிவு சிறந்தமுறையில் மறுமணத்தோடு முடிவது யாவருக்கும் சந்தோஷமளிப்பதாக இருக்கிறது மொத்தத்தில் அனைவரும் ஒருமுறையல்ல குறைந்தது இருமுறையாவது பார்க்கவேண்டியபடம் "மணமகள்".

வேட்டைக்காரன்புதூர்.

சுதந்திர விழாவை ஒட்டி ஷை ஊரில்காலையில் போர்டு பள்ளியில் கொடியேற்றி குழந்தைகளுக்கு தின்பண்டங்கள்வழங்கப்பட்டன காந்திஜி படம் யானைமீது அலங்கரிக்கப்பட்டு வாத்தியத்துடன் ஸ்ரீ வி. கே. ரங்கராஜகவுண்டர் தலைமையில் ஊர்வலம் நடைபெற்று மாரியம்மன் கோவில் மைதானத்தில் ஸ்ரீ வீராகவநாயக்கர் கொடியேற்றினார். காந்திஜிக்கு அஞ்சலிசெய்து நிர்மாண வேலைகளை செய்வதாக பிரதிக்ஞை எடுத்துக்கொண்டனர். ஸ்ரீ வி. கே. பழனிச்சாமிக்கவுண்டர் முதலிய பிரமுகர்கள் ஷை விழாவில் கலந்து கொண்டனர்.

கவுண்டர் & கம்பெனி

லிமிடெட்,

கூட்ஷெட் ரோடு, பொள்ளாச்சி.

போர்டு; செவர்லெட்

இதர மோட்டார்களுக்கு அவசியமான உறுப்புகள்,

டயர், டியூப்புகள், பேட்டரி வகைகள்

விற்பனை செய்யப்படும்.

பஸ், லாரி பாடிகள் போட்டுக்கொடுப்பதுடன்,
எல்லாவிதமான மோட்டார் ரிப்பேர்களும்
செய்து கொடுக்கப்படும்

அறிவிப்பு.

உறுதிக்கும், நேர்த்தியான வேலைப்பாட்டிற்கும்
சிக்கனத்திற்கும் உத்திரவாதமுள்ள

டால்மியா போர்ட்லண்டு

——)● சிமிட்டியை ●(——

யாவரும் எளிதில் பெற்று உபயோகிக்கும் பொருட்டு
பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை,
பழனி
ஆகிய இடங்களில் கடைகள்
திறக்கப்பட்டிருக்கின்றன.

நா. மகாலிங்கம்,

டால்மியா சிமிட்டி ஏஜண்டு, பொள்ளாச்சி.

உலகப் பிரசித்திபெற்ற பல்லடம்

உரிமையாளர்:

P. A. ரஹீம் சாயபு,

பல்லடம்.

ஏஜண்ட்:

A. K. யாகூப் சாயபு,

பொள்ளாச்சி.

குயில் மார்க் பீடிகளையே வாங்கி

உபயோகியுங்கள்.

"லக்க ஜோசியம்"

4-8-51 முதல் 30-8-51 வரை.

1	2	3	4	5	6	7	8	9
A	B	C	D	E	F	G	H	I
J	K	L	M	N	O	P	Q	R
S	T	U	V	W	X	Y	Z	

RAMAN
9 1 4 1 5, 2+9+1+4+1+5
22, 2+2=4 இந்த நெம்பர் 4 தான்.
RAMAN என்கிற எண்ணிற்கு வ
எண் நெம்பர் 4யை கவனித்தால் பல
ள் தெரியவரும். அதே மாதிரியாக
வொருவருடைய பெயர்களை கணிதரீ
ாக செய்துபலன் பார்க்கவும். அப்படி
களுக்கு வசியஎண் தெரியாவிட்டால்
க்கு எழுதவும். பூரூஆயுள் பலன்தெரி
வண்டுமானல் லக்கஜோசிய ஸ்பெஷல்
ணைப்பூர்த்திசெய்து 14-அணு மணி
ர் அல்லது போஸ்டல் ஆர்டர் மூல
அனுப்பினல் விபரமான பூரூஆயுள்
ன்கிடைக்கும்.

1
வெள்ளி - சுபகரநாள்
சனி - பணவரவு
ஞாயிறு - பந்து வரவு
திங்கள் - உற்சாகம்
செவ்வாய் - பிரயாணம்
புதன் - லிகித அனுகூலம்
வியாழன் - அனுகிரகம்

2
வெள்ளி - கெட்டநாள்
சனி - சும்மா இருக்கவும்
ஞாயிறு - மத்திபம்
திங்கள் - கடன் உபத்திரவம்
செவ்வாய் - கெட்டசெய்தி
புதன் - ஆரோக்கிய குறைவு
வியாழன் - அதிக சிலவு

3
வெள்ளி - பிரயாணம்
சனி - பிரபு தரிசனம்
ஞாயிறு - ஆசீர்வாதம்
திங்கள் - வெற்றி
செவ்வாய் - லிகித அனுகூலம்
புதன் - பணவரவு
வியாழன் - பிரயாணம்

4
வெள்ளி - மத்திபநாள்
சனி - ஆரோக்கிய குறைவு
ஞாயிறு - சிலவு
திங்கள் - மறதி
செவ்வாய் - சிறியலாபம்
புதன் - மத்திபம்.
வியாழன் - மத்திபம்

5
வெள்ளி - உற்சாகம்
சனி - நல்வரவு
ஞாயிறு - வெற்றி
திங்கள் - பணவரவு
செவ்வாய் - கெட்டநாள்
புதன் - மத்திபம்
வியாழன் - அசுபநாள்

6
வெள்ளி - மத்திபம்
சனி - சும்மா இருக்கவும்
ஞாயிறு - விரையம்
திங்கள் - பந்துக்கள் வரவு
செவ்வாய் - கஷ்டம்
புதன் - அதிகசிலவு
வியாழன் - மனக்கிலேசம்

7
வெள்ளி - விரையம்
சனி - கஷ்டம்
ஞாயிறு - மத்திபம்
திங்கள் - அதிகமறதி
செவ்வாய் - ஆரோக்கிய குறைவு
புதன் - கஷ்டம்
வியாழன் - பந்து விரோதம்

8
வெள்ளி - மானபங்கம்
சனி - அவமானம்
ஞாயிறு - கஷ்டம்
திங்கள் - பணசிலவு
செவ்வாய் - கெட்டசெய்தி
புதன் - காயம்
வியாழன் - ரணம்

9
வெள்ளி - வெற்றி
சனி. பணவரவு
ஞாயிறு அதிக சௌக்கியம்
திங்கள்: வாகன லாபம்
செவ்வாய்: லிகித அனுகூலம்
புதன்: பிரயாணம்
வியாழன்: பந்துக்கள் சந்திப்பு

சந்திரன் காலேஜ் ஸ்கூல்.
298, இடையர் வீதி, கோயமுத்தூர்.
ஒரு வருஷத்தில் 14-வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண்கள் E. S. L. C. யிக்கும் 20-வயதிற்கு மேற்பட்டவர்கள் மெட்ரிகுலேஷனுக்கும், 9-ம் வகுப்புவரை ஹைஸ்கூல்களிலும் சேரலாம். S. S. L. C. இண்டர் வகுப்புகள் உண்டு. ஹாஸ்டல் உண்டு.
தலைவர்:- S. R. Chandran.

RAJA VENKATRAM GHEE STORES
PROP. V. C. ALAGIRISWAMY NAIDU
COIMBATORE.

தபால் பெட்டி நெ. 25.

N.B :— செடிமேடு பவுன் நகைகள் உத்திரவாதத்துடன் கிடைக்கும்.
Prop: B. பாலமாணிக்கம் செட்டியார் & பிரதர்ஸ்.

கேள்வி--பதில்.

(பர்ஸாத்)

கே: அரசியல் வாதியும், சினிமா நடிகையும் மணம் செய்துகொண்டால் அவர்கள் வாழ்க்கை எப்படியிருக்கும்?

ப: இருவருடைய வாழ்க்கை பெட்ரோலும் நெருப்பும்போல இருக்கும்.

கே: அழகிய ஆண்கள் போட்டோக்கள் தேவை. இதற்குத் தாங்கள் ஒருவழி சொல்லவும்.

(இளம்கயலாட்சி)

ப: மணமகன் தேவை என்று பத்திரிகைகளில் விளம்பரம் செய்யு[illegible]ள். வேலையில்லா மாப்பிள்ளைகளின் [illegible]டோக்கள் நிறைய வரும்.

கே: எனக்கு வரவர இந்த ஆண்கள் ஆட்சியேபிடிக்கவில்லை. ஆகையால் இந்த ஆட்சியை ஒழித்து பெண்கள் ஆகியநாம் ஏன் ஆட்சி செய்யக்கூடாது என்று தோன்றுகிறது?

(ராஜலக்ஷ்மி)

ப: அல்லிராணியாக மாறிஆட்சிபுரிய நினைத்தால் அர்ஜுனன் ஒருவன் இருக்கிறான் என்பதை மறந்துவிடாதீர்கள்.

கே: எனது உடல் பருமன் தினம்பெருகிக்கொண்டே வருகிறது. இதைக்குறைக்க என்ன செய்வது?

(அப்பாத்துரை)

ப: பிரதி தினமும் உச்சிவேளையில் நம் நகரில் இருக்கும் தார்ரோடுகளில் நடந்து பாரும்.

கே: நம்முடைய மந்திரிசபையில் காங்கிரஸ் அல்லாதவர்களை நிதிமந்திரியாகப் போடுவதின் காரணம் என்ன?

(பி. எஸ். வெங்கிட்டு)

ப; மத்திய சர்க்காரைத்தவிற மற்ற மந்திரி சபைகளில் காங்கிரஸ்காரர்களும் இருக்கிறார்களே ஸார்.

கே: தெருவில்போகும் சாதாரணமனிதன் கூட கேவலமாகப்பேசும் நிலைமைக்கு இன்று காங்கிரஸ்வந்துவிட்டது ஒருசில சுயநலச்செயலால் எண்ணற்ற தேசபக்தர்கள் பாடுபட்டு வளர்த்த காங்கிரஸ் பழிப்புக்கு இடமாகிவிட்டதுஎன்று தூற்றித்திரிந்த ம. பொ. சிவஞானகிராமணி இப்போது போற்றிவருவதின் காரணம் என்ன?

(ஏ. வி. ராமன்)

ப: இதற்கு பதில் தெரிய விரும்பினால் 5--4--51 ம் தேதிய வாசியின் 8-வது வெற்றியைப்பாரும்.

கே; என்னிடம் நிறைய பணம் இருக்கிறது இதற்கு என்ன செய்வது?

(கோபால்சாமி)

ப: பேசாம[illegible]தர்மணியிடம்கொடுத்துவிடும். மூ[illegible]களில் இருக்குமிடம் தெரியாது

கே: ரயில்வே தொழிலாளர்களுக்கும், போஸ்ட் தொழிலாளர்களுக்கும் அதிக சம்பளம் கொடுக்காவிட்டால் வேலை நிறுத்தம்செய்வதாக சோஷலிஸ்ட் தலைவர்கள் சொல்லுகிறார்களே அவர்கள் வேலைநிறுத்தம் செய்தால் அவர்களுடைய சாப்பாட்டிற்கு இத்தலைவர்கள் கொடுப்பார்களா? இவர்கள் வேலை நிறுத்தம் செய்வதினால் மக்களுக்கு ஒருவிதகஷ்டமும் இல்லையா? அப்பொழுது நாட்டில் உணவுப்பஞ்சம் ஏற்படாதா?

(ஆர். நடராஜன்)

ப; இவ்வளவுக்கும் காரணம் நாட்டின் நன்மையை கவனியாமல் பதவிப்பித்தும் சுயநலமும்தான்.

சொற்பொழிவு பயிற்சி

18-ம் தேதி மாலை காங்கிரஸ்ஆபீஸில் ஸ்ரீ ஆர். கிருஷ்ணசாமிக்கவுண்டர் தலைமையில் நகர காங்கிரஸ்கமிட்டியின் சார்பில் சொற்பொழிவுபயிற்சிக்கூட்டம்நடைபெற்றது. அதுசமயம் தேர்தல் என்னும் பொருள்பற்றி, ஸ்ரீமான்கள் பழனியப்ப முதலியார், ஆறுமுகம், திருப்பூர் டி. பி. ராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள். காரியதரிசி காதர்[illegible]தீன் நன்றி கூறினார்.

இளைஞர் காங்கிரஸ் கூட்டம்.

சின்னாம்பாளையத்தில் இளைஞர் காங்கிரஸ் கமிட்டிக்கூட்டம் உபதலைவர் ஸ்ரீ பி. கா[illegible]பன் தலைமையில் கூடியது. அதுசமயம் மேற்படி கிராமத்திற்கு அருகில் இருக்கும் பள்ளத்தின்மேல் ஒரு சாதாரணப்பாலம் கட்டவேண்டுமென்றுஜில்லா போர்டை கேட்டுக்கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பொள்ளாச்சி பஜார்!

சுந்திரம் ஜுவல்லரி மார்ட் &
A, C. C. நீலகிரி பிராண்டு
சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்,
S. நாகமாணிக்கம்செட்டியார் & பிரதர்,
போன் நெ. 85.
கடை வீதி & மார்க்கட் வீதி.

மாடர்ன் கபே,
போர்டிங் & லாட்ஜிங்,
கடை வீதி & கச்சேரி வீதி.

எனமல் & போட்டோ போர்டுகளுக்கு
M. முத்து, பெயிண் [illegible]ர்க்ஸ்,
மரப்பேட்டை வீதி.

குறைந்த விலையில்
நம்பிக்கையான இடம்
K. ராமச்சந்திரன்,
பித்தளைப்பாத்திர வியாபாரம்
பெரியகடை வீதி,
கோவை.

1-வருடத்தில் பலன்தரும்
மாஞ்செடி விலை ரூ. 10—0—0.
P K. P. சாமி
மாஞ்செடி வியாபாரம்,
சத்திரம் ரோடு, பொள்ளாச்சி.

விவசாயிகளுக்கு
ஓர் வேண்டுகோள்.

மூன்று வருஷத்தில் பலன்தரும் ஒட்டுமாஞ்செடிகளும் சாத்துக்கொடி ஆரஞ்சு, சீமைத்தென்னம்பிள்ளைகளும், காய்கறி விதைகளும, பலவித புஷ்பச்செடிகளும் பிரபல மிராஸ்தாரர்களிடம் கொடுத்து நன்மதிப்பு பெற்றிருக்கிறோம். தங்கள் அன்பார்ந்த ஆர்டரையும் ஆதரவையும் எதிர்பார்க்கிறோம்.

எமது புக்குடன் வரும் எமது ஏஜண்டுகளுக்கு ஆதரவு கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

தங்கள் ஆர்டரில் கண்டுள்ள செடிகளை தங்கள் ஊருக்கு சமீபத்திலுள்ள ரயில்வேஸ்டேஷனுக்கு எங்கள் செலவில் அனுப்பப்படும்.

பேக்கிங் சார்ஜ்தனி. [illegible]டர் கொடுப்பவர்கள் ரூ. 100 க்கு ரூ. 25 அட்வான்ஸ் செலுத்த வேண்டும்.

ஆகஸ்டு 15-தேதி புதன் முதல்

கோவை கர்ணாடிக்கில்

எனெஸ்கே பிலிம்ஸ்

மணமகள்

நடிகர்கள்

கிருஷ்ணன், மதுரம், பாலையா,
சகஸ்ரநாமம், டி. பாலசுப்ரமணியம்,
லலிதா - பத்மினி, பாண்டியன்,
புளிமூட்டை ராமசாமி;

டைரெக்ஷன்; என். எஸ். கிருஷ்ணன்.

கோவை நீலகிரி ஜில்லாக்களுக்கு
வினியோகஸ்தர்கள்:

கோயமுத்தூர் பிக்சர்ஸ் லிமிடெட்,
கோயமுத்தூர்.

Edited & Published by P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi